எம்.சி.ஓ.பி எண்: 4660 /2006 தேதி: 28.07.2026

மசா. : 3

பெயர் : மூர்த்தி

த/பெ. : கேசவன்

வயது : 51

**சத்திய பிரமாணம் செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 18,19 மட்டும் தாக்கல் செய்கிறேன். மசாஆ 19 ஆவணம் மட்டும் எதிர்தரப்பு ஆட்சிபேனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நீதிமன்ற அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்கவரவில்லை. மனுதாரர் தரப்பில் கேட்டுகொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். விபத்தை பார்த்ததற்கும் சம்பவ இடத்தில் இருந்தேன் என்பதற்கும் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆலந்துார் நீதிமன்றத்தில் நான் சாட்சி அளித்தேன். குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சி பட்டியலில் என் பெயர் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எதிரே மோதிய வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர் விடுதலை ஆகிவிட்டார். மசாஆ 19 ஆவணம் அசல் என்னிடம் தற்பொழுது இல்லை. இருசக்கரவாகனம், இலகுரக வாகனங்கள் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது. மசாஆ 19 ஓட்டுநர் உரிமம் வழங்கப்பட்ட காலம் தெளிவாக தெரியவில்லை. அசலை பார்த்தால் சொல்லமுடியும். மசாஆ 19 ஆவணம் இந்த வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. இந்த விபத்து என்னுடைய கவனக்குறைவால் நடந்தது என்றாலும் நான் தான் இழப்பீடு தரவேண்டும் என்றால் சரியல்ல.

X

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.